திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நவமணி மேல் எழுப்பிய உரிமைப் பிரச்னைக்கு பின்னால் வர இருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். முதலில் இதைப்பற்றி என்னுடைய தீர்ப்பை அளித்துவிடுகிறேன்.

இந்த நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். என்னுடைய தீர்ப்பைக் கொடுத்த தற்குப் பிறகு உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங் கள்.

(இ) உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன், தான் ஒரு வருக்கு எழுதாத கடிதத்தை எழுதியதாக மாண்புமிகு முதல் அமைச்சர் பேரவையில் படித்தது குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 28—11—1973-ஆம் நாளன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள்.

27—11—1973-ஆம் நாளன்று, முதல் துணை மதிப்பீட்டின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதல மைச்சரவர்கள் உரை நிகழ்த்துகையில் ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டி, அது உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால் எழுதப்பட்டது என்று கூறினார். அக்கடிதம் தன்னால் எழுதப் படவில்லையென்றும், தம் மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற கருத்துடன் அவ்வாறு சாட்டப்பட்டுள்ளதென்றும் இப்பொழுது இந்த உரிமைப் பிரச்சனைக் கடிதத்தில் உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறுகிறார்.

1973 டிசம்பர் 1] [பேரவைத் தலைவர்]

இப்பொழுது நாம் தீர்மானிக்க வேண்டியது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அக்கடிதத்தைப் படித்தது அவையுரிமையை மீறிய செயலா என்பதேயாகும்.

இதைத் தீர்மானிப்பதற்கு முன் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உரையையும் அப்பொழுது குறுக்கிட்டுப் பேசிய உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உரையையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இது சம்பந்தமாக நிகழ்த்தப்பட்ட உரைகள் பின்வருமாறு:—

" மாண்புமிகு முதலமைச்சரவர்கள் :—

. . . டைரக்டர் பதவி வாங்கித் தருகிறேன், சென்னைக்குப் போக வழிச்செலவும் கார் நிதியும் கொடு என்று ஒருவருக்குக் கடிதம் எழுதியது உண்டா?

திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் :

இதுவரை நான் எவருக்கும் அதுமாதிரிக் கடிதம் எழுதியது கிடையாது. அவர்கள் நிரூபிக்கத் தயாரா?"

இதை அடுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் :

" தலைவர் அவர்களே, உங்களுடைய கையெழுத்துப் பெற்ற அந்தக் கடிதத்தைப் படிக்கிறேன்" என்று அறிவித்துவிட்டு, கடிதத்தைப் படித்துக்காண்பித்தார்.

இந்தக் கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் படித்து முடித்தவுடன் உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசியதாவது :—

" அந்த விஸ்வநாதன் என்பவர் யார் என்பதை முதலில் இந்த அவை புரிந்து கொள்ளவேண்டும். உள்ளபடியே நான் விளக்கம் அளிக்க வேண்டும். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த நேரத்திலே குளித்தலை சட்ட மன்ற உறுப்பினருக்கு ஒரு கார் பரிசளிக்கப்பட்டது. அதைப் போன்று என்னுடைய தொகுதியிலும் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு அது ஒரு ஆண்டுக் காலம் இழுக்கப்பட்டது. என்னுடைய தொகுதியிலே ஒரு குழு

அமைத்தார்கள். அந்தக் குழுவிலே பலர், அவர்களே அச்சடித்துக் கொண்ட சீட்டுகளை வைத்துக்கொண்டு வசூல் செய்தார்கள். ஆனால் எந்தவிதமான வசூலையும் ஒப்படைக்கவில்லை.

இந்த விஸ்வநாதன் என்பவர் கரூரில் பல முதலியார்களிடம் என்னுடைய பெயரைச் சொல்லி இந்தச் சீட்டை வாங்கி ஏராளமாகப் பணத்தை வசூலித்து தானே வைத்திருக்கிறார்கள். இது தான் உண்மை . . . இந்தக் கடிதத்தை அதோடு இணைப்பது எந்தவிதத்தில் பொருந்தும் என்பதை முதலமைச்சரவர்கள் சொல்லவேண்டும்."

மேலே கண்ட உரைகளிலிருந்து தெரிவதென்ன? உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் முதலில், எவருக்கும் கடிதம் எழுதியது கிடையாது என்று கூறியவர், பின்னால், முதலமைச்சரவர்கள் அக்கடிதத்தை வாசித்தவுடன், அந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அந்த விஸ்வநாதனைப் பற்றியும் அந்தக் கடிதத்தில் கண்ட கார் நிதி வசூல்பற்றியும் விளக்கம் தந்தார். அந்தக் கடிதம் பற்றி எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. மாறாக, அவர் எழுப்பிய வினா . .

"இந்தக் கடிதத்தை அதோடு இணைப்பது எந்தவிதத்தில் பொருந்தும் என்பதை முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும்". என்பதே ஆகும். ஆக, இந்த உரைகளிலிருந்து தெளிவாகத் தெரிவது, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், அக் கடிதம் எழுதப்பட்ட சூழ்நிலையை விளக்கியுள்ளார் என்பதே ஆகும்.

இப்படியிருக்க, அடுத்த நாள், அதாவது 28—11—1973-ஆம் நாளன்று, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உரிமைப் பிரச்சினையை எழுப்பி, அக்கடிதம் அவரால் எழுதப் படாதது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார். அதுபற்றி உறுப்பினர் அவர்கள் பேசுகையில் முந்திய தினம் பேரவைக்குள் துண்டு அறிக்கைகளை வீசியெறிந்து கோஷங்கள் எழுப்பிய மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டுகளை உறுப்பினர் கொடுத்திருந்ததால் உறுப்பினர் மீது ஆத்திரம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சரவர்கள், அவர் மீது களங்கத்தை உண்டாக்கவேண்டு

1973 டிசம்பர் 1] [பேரவைத் தலைவர்]

மென்று கருதி, அவரால் எழுதப்படாத கடிதத்தை வாசித்தார் எனக் கூறினர். இதற்குப் பதிலளிக்கையில் இதை மறுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள், தம்மால் வாசிக்கப்பட்ட கடிதம் 1968-ஆம் ஆண்டு தபால் முத்திரையுடன் கூடிய கடிதம் என்றும் தெரிவித்தார்கள்.

இப்பொழுது நாம் பார்க்கவேண்டியது—உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறியுள்ளபடி, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வேண்டுமென்றே, உறுப்பினரால் எழுதப் படாத கடிதத்தை உறுப்பினர் எழுதியதாக அவையில் வாசித் தாரா என்பதே ஆகும். || முதல் நாள் பேரவைக்குள் துண்டு அறிக்கைகளை வீசியெறிந்த மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டை வழங்கியது உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தான் என்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இக் கடிதத்தை உருவாக்கியிருக்க முடியாது என்பது தெளிவு. ஏனெனில், அக்கடிதம் 'இன்லண்டு லெட்டரில்' எழுதப் பட்டுள்ளது. அதில் 23—12—1968, 24-12-1968, 25-12-1968 தேதிக்குள்ள தபால் முத்திரைகள் தெளிவாகப் பதிந்துள்ளன . . . எனவே, 27—11—1973-இல் நடந்த ஒரு நிகழ்ச்சியின் காரணமாக, 1968-ஆம் ஆண்டு தபால் முத்திரை போட்ட கடிதத்தை எவராலும் பொய்யாக உருவாக்க இயலாது. எனவே, முந்திய நாள் மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கிய காரணத்தால் இக் கடிதம் உருவாக்கப்பட்டது என்று உறுப்பினர் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

மேலும், மேலே கூறப்பட்ட உரைகளிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவெனில், 27—11—1973-ஆம் நாள், இக்கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் படித்தவுடன், உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் அக்கடிதம் யாருக்கு எழுதப் பட்டிருக்கிறதோ அந்த விஸ்வநாதனைப் பற்றியும், அந்தக் கடிதத் தில் கூறப்பட்டுள்ள கார் நிதியைப்பற்றியும் விளக்கங்களைத் தான் கூறினர்கள். அதிலும், ஏற்கனவே நான் கூறியபடி உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இறுதியாகக் கேட்ட கேள்வி—"இந்தக் கடிதத்தை அதோடு இணைப்பது எந்த

விதத்தில் பொருந்தும் என்பதை முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும்'' என்பதுதான்.

மேலே சொல்லப்பட்டதிலிருந்து இரு கூறுகள் தெளிவாகின்றன. ஒன்று 27—11—1973-ஆம் நாளன்று, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் எழுதியதாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வாசித்த கடிதம் பற்றி பதிலளிக்கையில், உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கடிதத்தில் கண்ட விஸ்வநாதன் பற்றியும், கார் நிதி பற்றியும் விளக்கங்கள் கூறியதோடு அமைந்துவிட்டார். இரண்டு—அடுத்த நாள், அதாவது 28—11—1973 அன்று, இப்பிரச்சினையை எழுப்பி, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், அக்கடிதம் தன்னால் எழுதப்பட்டதல்ல என்று திட்டவட்டமாக மறுத்தபொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அக்கடிதம் உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால்தான் எழுதப்பட்டது என்று கூறவில்லை. இதுவே இந்நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இது, தாம் எழுதிய கடிதம் அன்று எனத் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறுகிறார். அது, அவர் எழுதியது அன்று என்பதை நானும் அறிந்தேன். இந்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொள்கிறார்.

இப்பேரவைக்கு தவறான தகவலை அல்லது தவறான ஆவணத்தை அது தவறு என்பதை அறிந்தும் வேண்டுமென்றே தருவது தான் அவை உரிமை மீறிய செயலாகும். 27—11—1973 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் படித்த கடிதம் "திரு. சௌந்தரபாண்டியன் 1968-ல் எனக்கு எழுதிய கடிதத்தைத் தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன் என்று'' விசுவநாதன் என்ற ஒருவரால் முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட கடிதம் ஆகும்.

எனவே, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர் எழுதாத கடிதத்தை வேண்டுமென்றே அவர் எழுதியதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பேரவையில் வாசித்தார் என்று கொள்ளுவதற்கில்லை. எனவே, உரிமைப் பிரச்சினை எதுவும் எழவில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.